DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.28/2021

Deposition of Witness : PW1

| Name | வெங்கடேசன் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | சீனுவாசன் | Village | |
| Age | | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 22.09.2025. | | | |

( Accused present)

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.K. பிரசாத் Gr-II 1724 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. நான் கடந்த 5 ஆண்டு காலமாக அயலர் பணியை செய்து வருகிறேன். நான் இந்த வழக்கு சம்பவம் நடந்தபோது நடுவீரப்பட்டு காவல் நிலையத்தில் பணிபுரிந்து அயலராக பணி மேற்கொண்டேன். நான் தொடர்ந்து அயலர் பணி செய்து வருவதால் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் எனக்கு நன்கு பழக்கமானவர்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து பண்ருட்டி காவல் நிலையத்திற்கான தூரம் சுமார் ஒன்றறை கி.மீ இருக்கும். மேற்படி தூரத்தினை நடந்து சென்றால் கூட 10 நிமிடத்தில் கடந்துவிடலாம் என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் நான் உடனடியாக அலைபேசி மூலம் சம்பவம் குறித்து நிலைய பாராவிடம் தகவல் சொன்னேன். எனது மேலதிகாரிகளுக்கு தகவல் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. மேற்படி நிலைய பாராவிற்கு தகவல் தெரிவித்ததன் அடிப்படையில் அவர் மூலம் தகவல் பெற்று, எனது உயர் அதிகாரிகள் பண்ருட்டி அரசு பொது மருத்துவமனைக்கு உதவி ஆய்வாளர் திரு.ஜவ்வாது உசேன் வந்து ஆஜர் எதிரியிடம் விசாரணை செய்தார்கள். இவ்வழக்கு சம்பவம் நடைபெறுவதற்கு முன் நான் என்ன செய்துகொண்டிருந்தேன் என்றால், எனக்கென ஒதுக்கப்பட்ட புறக்காவல் நிலைய அறையில் அலுவலக பணியில் இருந்தேன். என்ன பணியை அப்போது மேற்கொண்டேன் என்று குறிப்பாக சொல்ல முடியுமா என்றால் முடியாது, ஏனென்றால் அது எனக்கு தற்போது நியாபகம் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தவர்களும், அவர்களுக்கு உதவியாக வந்தவர்களும் மொத்தமாக எத்தனை பேர் இருப்பர் என்றால் 10 பேர் இருப்பர்.

2. பண்ருட்டியில் நகராட்சி அனுமதி பெற்ற 4 சக்கர மகிழுந்து நிறுத்துமிடங்கள் (Car stand) எத்தனை உள்ளது என்றால் எனக்கு தெரிந்தவரையில் ஆய்வு மாளிகைக்கு எதிரில் ஒன்றும்,

நீதிமன்றத்திற்கு பின்புரம் ஒன்றும் மொத்தம் 2 உள்ளன. என்னை தாக்கிய நபர் பெயர், விலாசம் கேட்டுத்தெரிந்த பாவாடைராயன், த.பெ.வைத்தியநாதன் என்று புகாரில் குறிப்பிட்டுள்ள நிலையில் அவரது பெயர் மற்றும் இதர விவரங்களை யாரிடம், எப்போது விசாரித்து தெரிந்துகொண்டேன் என்றால், மேற்படி பாவாடைராயனுடன் சிகிச்சைக்காக வந்திருந்த வெங்கடேசன், த.பெ.இராமச்சந்திரன் என்பவரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டேன். மேற்படி விவரங்களை எனது புகாரிலோ, எனது மேலதிகாரிகள் என்னை விசாரிக்கும்போதோ, நீதிமன்ற எனது முதல் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரிதான், மேற்படி விவரத்தினை புகாரில் தெரிவிக்கவேண்டிய அவசியம் கிடையாது. ஆஜர் எதிரி பாவாடைராயன் விலாசத்தை புதுப்பேட்டை என்று நான் குறிப்பிட்டுள்ளது தவறு என்றாலும், அவர் துரைப்பாடியை சேர்ந்தவர் என்றாலும் அதைப் பற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி பாவாடைராயன் குளுக்கோஸ் ஏற்றும் கம்பியை காட்டி என்னை திட்டி, கொலைமிரட்டல் விடுத்ததாக நான் எனது புகாரிலும், நீதிமன்ற முதல் விசாரணையிலும் குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி கம்பியினை போலிசார் கைப்பற்றினரா என்றால் கைப்பற்றவில்லை. ஆஜர் எதிரி என்னை இடதுபக்க கன்னத்தில் குத்தவேயில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு இடதுபக்க உதட்டில் ஓரத்தில் ஏற்பட்ட காயம் நான் மதுபோதையில் கால் இடறி கீழே விழுந்ததனால் ஏற்பட்ட காயம் என்றாலும், அது ஆஜர் எதிரி என்னை தாக்கியதால் ஏற்பட்டதல்ல என்றாலும் சரியல்ல, ஏனெனில் எனக்கு மது அருந்தும் பழக்கம் கிடையாது.

3. மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பணியில் இருந்தும்கூட, சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்திலிருந்து 40 நிமிடங்கள் கழித்துதான் எனக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயத்திற்கு நான் சிகிச்சை எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி இடைப்பட்ட 40 நிமிட நேரத்தில் நான் எனது நலன்விரும்பிகள், சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகள் ஆகியோர்களிடம் கலந்தாலோசித்து வழக்கிற்காக ஒரு போலியான சிகிச்சை மேற்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான், என்னை எதிரி தாக்கியதாக சொல்லும் சமயத்திற்கு 5 நிமிடத்திற்கு முன்பே, நான் எதிரியை தாக்கியதனால் ஏற்பட்ட காயங்களுக்காக எதிரியானவர் அதே மருத்துவமனையில் ஏ.ஆர் பதிவு செய்யப்பட்டு, சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்றால் அவர் பொய்யான புகார் கொடுத்து அதனடிப்படையில் சிகிச்சை மேற்கொண்டுள்ளார். அவசர சிகிச்சை பிரிவில் மேற்படி மருத்துவமனையில் 2 கண்காணிப்பு கேமராக்கள் முறையே ஒன்று மருத்துவரை நோக்கியும், வாசற்படியை நோக்கியும், மற்றொன்று மேற்குபுற சுவற்றில் பொருத்தப்பட்டு கிழக்கு பகுதியில் உள்ள வார்டுகளை கண்காணிக்கும்படி பொருத்தப்பட்டுள்ளன என்றால் 2 கேமராக்கள் உள்ளது பற்றிய விவரம் எனக்கு தெரியும், ஆனால் அவை எந்தெந்த திசையில் நோக்கி உள்ளன என்பதுப்பற்றி எனக்கு தெரியாது.

4. எங்கள் காவல் நிலையத்தில் டியூட்டி ரோஸ்டர் மற்றும் மெயின் டியூட்டி ரோஸ்டர் என்று 2 பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்றால் டியூட்டி ரோஸ்டர் மட்டும் தான் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பதிவேட்டில் யார், யார் அன்றைய தினம் பணிக்கு வந்துள்ளார்கள், அவர்களுக்கு என்னென்ன பணி என்பது பற்றிய விவரங்கள் குறிப்பிட்டு அதில்

எங்களது மேலதிகாரி கையெழுத்திட்டுருப்பார் என்றால் சரிதான். ஒவ்வொரு நாளும், நிலைய அணிவகுப்பு முடிந்தவுடன் எங்களுக்கென்று கொடுக்கப்பட்டுள்ள தனி கையெட்டில் எங்களுக்கென குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை எழுதி, அதில் எங்களது மேலதிகாரியின் கையொப்பத்தினை பெறுவது வழக்கம் என்றால் நான் நிலைய பணியில் இருந்தால் அவ்வாறு கையெழுத்து வாங்குவேன், மருத்துவமனை பணியில் இருந்தால் வாங்குவதில்லை, ஆனால் Intimation register ல் அன்றைய தினத்தில் பணிபொருப்பில் இருந்த மருத்துவ பெயரும், காவல் அதிகாரியின் பெயரும், தேதியோடு குறிப்பிட்டு பராமரிக்கப்படும். மேற்படி பதிவேட்டில் எதிரி என்னை தாக்கிய விவரத்தையும், மேற்படி எதிரி என்னால் தாக்கப்பட்ட விவரத்தையும் குறிப்பிட்டிருப்பேன் என்றால் விபத்து பதிவேட்டினை பதிவு செய்த மருத்துவர் என்னிடம் கொடுத்த விவரங்களை மேற்படி பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி விவரங்களை நான் எத்தனை மணிக்கு Intimation register ல் பதிவு செய்தேன் என்றால் அது தற்போது நியாபகம் இல்லை. நான் இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக எத்தனை மணிநேரம் உள்நோயாளியாக மருத்துவ சிகிச்சையில் இருந்தேன் என்றால் அது தற்போது நியாபகம் இல்லை.

5. நான் இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக எத்தனை பேர், என்னென்ன ஆயுதத்தால் தாக்கினார்கள் என்ற விவரத்தை கூறிதான் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். மருத்துவமனையில் நான் பராமரிக்கும் Intimation register ஐ எனது மேலதிகாரி கைப்பற்றினாரா என்றால் கைப்பற்றவில்லை. ஆஜர் எதிரி ஒரு கட்சியில் முக்கிய பணியில் உள்ளவர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எங்களுக்கு அரசாங்கத்தால் கிடைக்கக்கூடிய ரேஷன் பொருட்களை, ஆஜர் எதிரியின் வாடகை ஆட்டோவில் தான் எடுத்து செல்வது வழக்கம் என்றால் சரியல்ல, ஏனெனில் எனது தெருவிலேயே ரேஷன் கடை உள்ளது. ஆஜர் எதிரிக்கு சொந்தமான டாடா ஏ.சியில் விற்கப்படும் காய்கறிகளிலிருந்து தான் எனது குடும்பத்திற்கு தேவையான காய்கறிகளை தினசரி வாங்குவது வழக்கம் என்றால் சரியல்ல. மேற்படி எனக்கும், ஆஜர் எதிரிக்கும் இடைப்பட்ட வர்த்தக பரிவர்த்தனை தொடர்பான பாக்கிக்காக ஆஜர் எதிரி எனது வீட்டில் வந்து கேட்டதனால் நான் ஆஜர் எதிரியை திட்டினேன் என்றாலும், அது தொடர்பாக ஆஜர் எதிரி என் மீது பண்ருட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றாலும் எனவே எனக்கும், ஆஜர் எதிரிக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்தது என்றாலும், அதனால் நான் காவலர் என்ற எனது அதிகாரத்தை பயன்படுத்தி ஆஜர் எதரி மீது பொய்யாக புகார் கொடுத்து, வழக்கு தாக்கல் செய்து, ஆஜர் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், ஆஜர் எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**அரசு தரப்பில் மறுவிசாரணை**

சம்பவ தினத்தன்று எதிரி என்னை தாக்கிய நேரம் அதிகாலை 2.35 மணியாகும். எதிரியை வழக்கு சம்பவத்தில் நான் தாக்கியதாக எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் சொல்லப்படுவது பொய்யாகும், எதிரியின் விபத்து பதிவேட்டிலும், சம்பவ நேரம் 2.35 என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்ட நேரம் அதிகாலை 3.05 மணியாகும். என்னுடைய விபத்து பதிவேட்டு

மேற்சொன்ன அதிகாலை 3.05 மணியாகும். எதிரி மேற்படி மருத்துவமனையில் எனக்கு பின்னர் தான் சிகிச்சை மேற்கொண்டதாக அவரது விபத்து பதிவேட்டில் நேரம் குறிப்பிடப்பட்டுள்ளது, சுமார் எவ்வளவு நேரம் கழித்து எனக்கு பின்னர் சிகிச்சை மேற்கொண்டார் என்றால் சுமார் 20 லிருந்து 30 நிமிடங்கள் வரையிருக்கும். மேற்படி நேரம் எனக்கு தற்போது சரியாக நியாபகம் இல்லை.

**எதிரி தரப்பில் மறுகுறுக்கு விசாரணை**

நான் குறிப்பிட்டுள்ளது போல் வழக்கு சம்பவம் எதுவுமே நடக்கவில்லை என்றாலும், அவ்வாறு உண்மையிலேயே நடந்திருந்தால் மேற்படி எனது மறுவிசாரணையில் கூறிய சங்கதிகளை எனது குறுக்கு விசாரணையிலேயே கூறியிருப்பேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னை எனது உயர் அதிகாரி எங்கு வைத்து விசாரித்தார் என்றால் பண்ருட்டி அரசு பொது மருத்துவமனையில் வைத்து விசாரித்தார். என்னை போலிசார் பண்ருட்டி அரசு பொது மருத்துவமனையில் வைத்து விசாரிக்கவில்லை என்றாலும், காவல் நிலையத்தில்தான் வைத்து விசாரித்தனர் என்றாலும் சரியல்ல.